சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 22.01.2024

SC.NO.31/2023

PW 1 : சுஜாதா (வயது 49 ) க/பெ.சிவகுமார்

(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் இலால்குடி வட்டம், கொப்பாவளி கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 03.12.2010ம் தேதியில் எனது வீட்டுக்காரர் காலை சொந்த வேலையாக திருச்சிக்கு சென்றிருந்தார். அப்போது வீட்டில் நானும் எனது மகன் விஜயராகவன் மகள் தாரணி ஆகியோர் வீட்டில் இருந்தோம். எனது வீடு திருச்சி ரோட்டிலிருந்து காட்டுர் செல்லும் வழியில் தென்னந்தேப்பில் காட்டுர் மெயின்ரோட்டை ஒட்டியவாரு அமைந்துள்ளது. எங்கள் வீட்டில் 1 ரூபாய் காயின்போட்டு பேசும் தொலைபேசி பாக்ஸ் வைத்துள்ளோம். அதில் வெளிநபர்கள் வந்து காயின் போட்டு பேசிவிட்டு செல்வது வழக்கம். என் வீட்டு அருகில் பஞ்சாயத்துக்கு சொந்தமான தெரு விளக்குகள் உள்ளது. இரவு நேரத்தில் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும். அன்று இரவு 7.30 மணியளவில், 1 ரூபாய் க்ரியின் பாக்ஸ் கீழே விழும் சத்தம் கேட்டு, நான் வீட்டிலிருந்து வெளியில் வந்து பார்த்தேன். அப்போது, காயின் பாக்ஸ் கீழே விழுந்து கிடந்தது. அப்போது எதிரில் இருந்த தார் ரோட்டில் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். கீழே கிடந்த காயின் பாக்ஸ் ஐ எடுத்து வீட்டின் அருகே இருந்த கட்டை மீது வைத்து கொண்டிருந்தபோது, வீட்டின் அருகில் இருந்த தூண் அருகிலிருந்து ஒரு நபர் திடீரென வந்து, என் கழுத்திலிருந்து தங்க தாலி செயினை, அறுத்துவிட்டார். செயினை பறிப்பதாக நான் கத்தினேன். அங்கிருந்த நபர் கையில் வைத்திருந்த கத்தியை வைத்து மிரட்டியது போல் வரவும், நான் நகர்ந்தேன், அப்போது அவரது கத்தி எனது கழுத்தில் லேசாக கீறி எனக்கு ரத்த காயம் ஏற்பட்டது. செயினை முழுவதுமாக பறித்துக்கொண்டு, என்னை தள்ளி விட்டு விட்டு ஓடிவிட்டார். அவர் ஓடும்போது ரோட்டிலிருந்த நபரும் திருச்சி மெயின்ரோடு பக்கமாக தப்பி சென்றுவிட்டனர். என்னை தள்ளிவிட்டதால் எனக்கு இரண்டு முழங்காலிலும் ரத்த காயம் ஏற்பட்டது. நான் சத்தம்போடவே, அருகில் இருந்தவர்கள் வந்து என்னை உட்கார வைத்து என்னிடம் விசாரித்தார்கள். அதன் பின்னர் நான் எனது கணவருக்கு போன் செய்து, தகவலை சொன்னேன். அதன் பேரில் அவர் வீட்டிற்கு உடனடியாக வந்தார். பின் நானும், எனது கணவரும் அருகில் இருந்தவர்களும் இலால்குடி காவல் நிலையம் சென்று நடந்ததை பற்றி புகாராக சொன்னேன். நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதி, படித்து காண்பித்தார்கள். சரியாக இருக்கவும் நான் அதில் கையொப்பம் செய்தேன். நான் புகாரில் தாலிபவுன் 7 3/4 பவுன், 4 காசுகள் 8 கிராம், 2 குண்டு மணி 4 கிராம் தங்க குழாய் 2 கிராம் என மொத்தம் 10 1/2 பவுன் மேற்படி நபர் பறித்துவிட்டு சென்றதாக சொன்னேன். என்னிடம் காட்டப்படும்

புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1/ அ.சா.1 ஆகும். போலிசார் எனக்கு காயம்பட்டதற்கு மருத்துவ நமுனா வழங்கி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். இரவு ஆனதால் அன்று சிகிச்சைக்கு செல்லாமல் மறுநாள் 04.12.2010 ஆம் தேதி நானும் எனது கணவரும் இலால்குடி, அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று விட்டு வீடு திரும்பினோம். இது சம்மந்தமாக இலால்குடி காவல் ஆய்வாளர் அன்றைய தினமே என்னை விசாரித்தார். அதன் பின்னிட்டு மீண்டும் அடுத்த நாளான 05.12.2010 அன்று மறு விசாரணை செய்தார். அப்போது முதல் நாள் புகாரிலும் வாக்குமூலத்திலும் பதட்டத்தில் 10 1/2 பவுன் என்று சொல்லி விட்டதாகவும் ஆனால் தாலி செயின் 5 பவுன் என்றும், காசு மற்றும் குழாய்கள் 1 1/2 பவுன் என மொத்தம் 6 1/2 பவுன் மேற்படி நபர் பறித்து சென்றுவிட்டதாக மறு விசாரணையில் சொன்னேன். 2011 ஆம் வருடம் சமயபுரம் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகளை பிடித்து வைத்துக்கொண்டு, எனக்கு போன் செய்து, எனது வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்களை பிடித்து வைத்துள்ளதாகவும், வந்து அடையாளம் காட்டும்படியும் சொன்னதன்பேரில் நான் சமயபுரம் காவல் நிலையம் சென்றேன். அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரிகளை இவர்கள் தான் எனது வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என கூறினேன். அப்போது எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட எனது நகைகளை உருக்கி தங்க கட்டிகளாக 6 1/2 பவுன் மதிப்புடைய தங்க கட்டியை என்னிடம் காண்பித்ததை, நான் அறிந்துக்கொண்டேன். சம்பவத்தன்று என்னிடமிருந்து தாலிசெயினை அறுத்தவர் இன்று ஆஜரில் உள்ள 1 ஆம் எதிரி கனகராஜ் ஆகும். சம்பவத்தன்று ரோட்டில் நின்று கொண்டிருந்த நபர் தான் இன்று ஆஜரில் உள்ள 2 ஆம் எதிரி ஜபருதின் ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னிடம் மறு வாக்குமூலம் வாங்கினார்கள். மேற்படி தங்க கட்டியை நான் இலால்குடி, குற்றவியல் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். நான் தற்சமயம் நீதிமன்றத்திலிருந்து வாங்கி சென்ற தங்க கட்டியை ஆஜர்படுத்தவில்லை. ரொம்ப நாட்களாகவும், தங்க கட்டியை மீண்டும் தாலி செயினாக செய்து நான் அணிந்து கொண்டேன். அந்த தங்க கட்டியை போட்டோ எடுத்து புகைப்படமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க கட்டிதான் நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றதாகவும் அந்த புகைப்படம் அ.த.சா.ஆ.2/அ.சா.1.

<u>(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் சாட்சியின் நலன் கருதியும் நீதியின் நலன் கருதியும், விரைவு நீதியின் பால்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என முடிவு செய்யப்படுகிறது)</u>

signed

சுஜாதா

signed

Thiru.S.Vijayakumar,M.A.M.L.,
Sub Judge, Lalgudi

சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 22.01.2024

SC.NO.31/2023

PW 2 : சிவகுமார் (வயது 54) த/பெ.தியாகராஜன்

(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் இலால்குடி வட்டம், கொப்பாவளி கிராமத்தில், காட்டுர் ரோட்டில் அமைந்துள்ள தென்னந்தோப்பில் எனது வீடு இருக்கிறது. அ.சா.1 சுஜாதா எனது மனைவி ஆவார். எனக்கு விஜயராகவன் என்ற மகனும், தாரிணி என்ற மகளும் உள்ளார்கள். 13.12.2010 தேதியில் இரவு 9 மணியளவில் வீட்டில் இருந்த காயின் பாக்ஸ் கீழே விழுந்ததாகவும், சத்தம் கேட்டு கதவை திறந்து கொண்டு வெளியே வந்து அ.சா.1 பார்த்ததாகவும், எனது வீட்டில் கட்டை ஓரமாக நின்று கொண்டிருந்த நபர் கத்தியை காட்டி எனது மனைவியிடமிருந்த 10 1/2 பவுன் தாலிசெயினை பறித்துவிட்டதாகவும், எனது மனைவியிடமிருந்த தாலிசெயினை பறிக்கும்போது அந்த நபர் எனது மனைவியை அடித்ததால் கீழே விழுந்துவிட்டதாகவும், அவர் வைத்திருந்த கத்தியால் கழுத்தில் கீறல் ஏற்பட்டதாகவும், மேற்படி நபர்கள் ஓடிவிட்டதாகவும், எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். உடனே நான் எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியிடம் என்ன நடந்தது என விசாரித்தேன். அதன் பிறகு இலால்குடி காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க எனது மனைவியுடன் சென்றேன். எனது மனைவி சொல்ல, இலால்குடி போலிசார் புகாரினை எழுதி அதனை படித்து காட்டி, எனது மனைவியிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். மேற்படி நகைகளின் மதிப்பு அன்றைய நிலவரப்படி 1,25,000/- பெருமானம் உள்ளது. அப்போது எனது மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்கு இலால்குடி போலிசார் மருத்துவ நமுனா வழங்கி இலால்குடி அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். எனது குழந்தைகள் தனியாக இருப்பதால், இரவு நேரம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லாமல், வீட்டிற்கு வந்துவிட்டு மறுநாள் காலை நானும் எனது மனைவியும் இலால்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று, எனது மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே வீட்டிற்கு வந்துவிட்டோம். இது சம்மந்தமாக போலிசார் சம்பவத்திற்கு மறு நாள் என்னை எனது வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். நகைகளை எனது மனைவி நீதிமன்றத்தில் மனு போட்டு வாங்கிய விவரம் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் தங்க கட்டியாக எனது மனைவி அதை பெற்றுக்கொண்டார்.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் சாட்சியின் நலன் கருதியும் நீதியின் நலன் கருதீயும், விரைவு நீதியின் பால்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என முடிவு செய்யப்படுகிறது)

signed

சிவகுமார்

signed

Thiru.S.Vijayakumar,M.A.M.L.,
Sub Judge, Lalgudi